National University Hospital

**Source:** Tamil Murasu, Page 5
**Date:** 15 January 2023

# புதுவாழ்வு தரும் உறுப்பு தானம்

*பிறந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என நம் வாழ்க்கை கண்ணிமைக்கும் நேரத்தில் முடிந்துவிடுகிறது. ஆயினும், ஒருவரின் முடிவு, இன்னொருவருக்குத் தொடக்கமாக இருக்கலாம். அவ்வாறு சிலரின் வாழ்க்கையை முழுமையாக மாற்றும் ஆற்றலுடைய, உயர்ந்த செயல்தான் உறுப்பு தானம். அறிவியல் பெரிதும் வளர்ந்துவிட்ட இன்றைய காலகட்டத்தில் ஒருவரின் உடல் உறுப்புகளில் பெரும்பாலானவற்றை மற்றொருவரின் உடலில் பொருத்த முடிகிறது. இத்தகைய சூழலில், உறுப்பு தானம் பற்றி மக்களிடையே எந்த அளவிற்கு விழிப்புணர்வு உள்ளது என்பதை அறிந்துவந்தது தமிழ் முரசு.*



அனுஷா செல்வமணி

ஆறு மில்லியன் மக்கள்தொகை கொண்ட சிங்கப்பூரில் உடலுறுப்பு தானத்திற்கான விழிப்புணர்வு மிகக் குறைவாகவே உள்ளது. மற்றப் பெரிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் ஒரு சிறிய நாடாக இருக்கும் சிங்கப்பூரில் 40 பேரில் பாதிப் பேர் மட்டுமே உறுப்பு தானத்திற்கு தகுதியானவர்களாக இருப்பர் என்கிறார் சிங்கப்பூர் பொது மருத்துவமனையின் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைத் திட்டத்தின் தலைவரும் இணைப் பேராசிரியருமான பிரேம ராஜ் ஜெயராஜ் (இடப்படம்)



அவசர சிகிச்சை தேவைப்படுவோர் அல்லது கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளோருக்கு உறுப்பு தானம் அவசியமாகிவிடுகிறது. மூளைச்சாவு அடைந்துபோவோரிடமிருந்தும் நல்ல உடல்நலத்துடன் இருப்போரிடம் இருந்தும் உறுப்பு தானம் பெறுவதுண்டு.

மாற்று அறுவை சிகிச்சைக்கான உறுப்பு பொதுவாக அந்த நோயாளியின் குடும்பத்தினரிடம் இருந்து வரும். நோயாளியுடன் தொடர்பில்லாதவர்களும் உறுப்பு தானமளிக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள் என்றார் டாக்டர் பிரேம ராஜ்.

கொவிட்-19 தொற்று பரவத் தொடங்கிய பிறகு, உறுப்பு தானம் வழங்க முன்வருவோரின் எண்ணிக்கை சரிந்துவிட்டதாகக் கூறுகிறார் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக மருத்துவமனையின் 'ஹெபடோ பிலியரி-பேன் கிரியாட்டிக்' பிரிவின் மூத்த ஆலோசகரும் இணைப் பேராசிரியருமான ஸ்ரீதர் கணபதி ஐயர் (மேல்படம்).



உறுப்பு தானமளிக்கத் தயங்குவோருக்கும் தகுந்த மனநல ஆலோசனை வழங்கப்படுகிறது.

சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை பற்றிய தகவல்களைப் பகிர்ந்துகொண்ட டாக்டர் ஸ்ரீதர், சிங்கப்பூரில் சிறுநீரகம் தானம் அளிக்க உயிருடன் இருப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும் அறுவை சிகிச்சைக்கு ஒருவர் சராசரியாக ஒன்பது ஆண்டுகள் காத்திருக்க வேண்டியுள்ளது என்றார்.

Source: Tamil Murasu © SPH Media Ltd.
Permission required for reproduction